ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ மொய்ம்மாம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மொய்ம்மாம் ॥

திருமாலுக்கு அன்பு செய்பவரை ஆதரித்தலும் அன்பிலாதாரை நிந்தித்தலும்

‡மொய்ம் மாம் பூம் பொழில் பொய்கை⋆
முதலைச் சிறைப்பட்டு நின்ற⋆
கைம்மாவுக்கருள் செய்த⋆
கார் முகில் போல் வண்ணன் கண்ணன்⋆
எம்மானைச் சொல்லிப் பாடி⋆
எழுந்தும் பறந்தும் துள்ளாதார்⋆
தம்மால் கருமம் என் சொல்லீர்⋆
தண் கடல் வட்டத்துள்ளீரே! (1)

தண் கடல் வட்டத்துள்ளாரைத்⋆ தமக்கிரையாத் தடிந்துண்ணும்⋆
திண் கழற் கால் அசுரர்க்குத்⋆ தீங்கிழைக்கும் திருமாலை⋆
பண்கள் தலைக்கொள்ளப் பாடிப்⋆ பறந்தும் குனித்துழலாதார்⋆
மண் கொள் உலகில் பிறப்பார்⋆ வல்வினை மோத மலைந்தே (2)

மலையை எடுத்துக் கல் மாரி
காத்துப்⋆ பசுநிரை தன்னை⋆
தொலைவு தவிர்த்த பிரானைச்⋆
சொல்லிச் சொல்லி நின்றெப்போதும்⋆
தலையினோடாதனம் தட்டத்⋆
தடுகுட்டமாய்ப் பறவாதார்⋆
அலை கொள் நரகத்தழுந்திக்⋆
கிடந்துழைக்கின்ற வம்பரே (3)

வம்பவிழ் கோதை பொருட்டா⋆ மால் விடை ஏழும் அடர்த்த⋆
செம் பவளத் திரள் வாயன்⋆ சிரீதரன் தொல் புகழ் பாடி⋆
கும்பிடு நட்டம் இட்டாடிக்⋆ கோகுகட்டுண்-டுழலாதார்⋆
தம் பிறப்பால் பயன் என்னே⋆ சாது சனங்கள் இடையே (4)

www.prapatti.com

சாது சனத்தை நலியும்⋆ கஞ்சனைச் சாதிப்பதற்கு⋆
ஆதியஞ்சோதி உருவை⋆ அங்கு வைத்திங்குப் பிறந்த⋆
வேத முதல்வனைப் பாடி⋆ வீதிகள் தோறும் துள்ளாதார்⋆
ஓதி உணர்ந்தவர் முன்னா⋆ என் சவிப்பார் மனிசரே (5)

மனிசரும் மற்றும் முற்றுமாய்⋆ மாயப் பிறவி பிறந்த⋆
தனியன் பிறப்பிலி தன்னைத்⋆ தடங்கடல் சேர்ந்த பிரானை⋆
கனியைக் கரும்பின் இன் சாற்றைக்⋆ கட்டியைத் தேனை அமுதை⋆
முனிவின்றி ஏத்திக் குனிப்பார்⋆ முழுதுணர் நீர்மையினாரே (6)

நீர்மையில் நூற்றுவர் வீய⋆ ஐவர்க்கருள் செய்து நின்று⋆
பார்மல்கு சேனை அவித்த⋆ பரஞ்சுடரை நினைந்தாடி⋆
நீர்மல்கு கண்ணினர் ஆகி⋆ நெஞ்சம் குழைந்து நையாதே⋆
ஊர்மல்கி மோடு பருப்பார்⋆ உத்தமர்கட்கென் செய்வாரே (7)

வார் புனல் அந்தண் அருவி⋆ வட திருவேங்கடத்தெந்தை⋆
பேர் பல சொல்லிப் பிதற்றிப்⋆ பித்தர் என்றே பிறர் கூற⋆
ஊர் பல புக்கும் புகாதும்⋆ உலோகர் சிரிக்க நின்றாடி⋆
ஆர்வம் பெருகிக் குனிப்பார்⋆ அமரர் தொழப்படுவாரே (8)

அமரர் தொழப்படுவானை⋆
அனைத்துலகுக்கும் பிரானை⋆
அமர மனத்தினுள் யோகு புணர்ந்து⋆
அவன் தன்னோடொன்றாக⋆
அமரத் துணிய வல்லார்கள்
ஒழிய⋆ அல்லாதவர் எல்லாம்⋆
அமர நினைந்தெழுந்தாடி⋆
அலற்றுவதே கருமமே (9)

கருமமும் கரும பலனும் ஆகிய⋆ காரணன் தன்னை⋆
திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத்⋆ தேவ பிரானை⋆
ஒருமை மனத்தினுள் வைத்து⋆ உள்ளம் குழைந்தெழுந்தாடி⋆
பெருமையும் நாணும் தவிர்ந்து⋆ பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே (10)

www.prapatti.com

‡தீர்ந்த அடியவர் தம்மைத்⋆ திருத்திப் பணிகொள்ள வல்ல⋆
ஆர்ந்த புகழ் அச்சுதனை⋆ அமரர் பிரானை எம்மானை⋆
வாய்ந்த வள வயல் சூழ்⋆ தண் வளங்குருகூர்ச் சடகோபன்⋆
நேர்ந்த ஓராயிரத்திப்பத்து⋆ அருவினை நீறு செய்யுமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com